விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 வைகாசி 23 ஷஃபா 13 இதழ் 113

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 6—6—82

81 - யாழ். வன்செயல்

## குற்றம் புரிந்தவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும்

### தமிழ் காங்கிரஸ் செயற்குழு கோரிக்கை

[யாழ்ப்பாணம்] ''மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தல் காலத்தில் யாழ். மாவட்டத்தில் ஆட்சியாளரின் ஆயுதப்படையினரால் நடாத்தப்பட்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடியாக நஷ்டஈடு வழங்கும்படியும் இவ்வன்செயல்களைச் செய்தவர்களைச் சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவந்து நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தும்படியும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று தமிழ்க்காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அ. இ. த. காங்கிரஸின் செயற்குழுக்கூட்டம் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் யாழ்ப்பாணத்திலுள்ள

(8ம் பக்கம் பார்க்க)

பயங்கரவாத தடை சட்டத்தின்கீழ் காவலில் உள்ள

# தமிழ் இளைஞர்களின் விபரம்

# ஜனாதிபதியிடம் கையளிப்பு

## அடுத்த வாரம் சிலர் விடுதலை?

(கொழும்பு)

வடபகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றிய முழுவிபரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை இரகசியப் பொலிசார் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் கையளித்துள்ளனர்.

ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரிலேயே தடுப்புக்காவலில் உள்ள தமிழ் இளைஞர்கள் பற்றிய விபரங்களை இரகசியப் பொலிசார் அவரிடம் கையளித்தனர்

இந்த இளைஞர்கள் மீது சுமத்தப்பட இருக்கும் குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது நடத்திய விசாரணை அறிக்கைகள் ஆகிய விபரங்கள் அந்த அறிக்கையில் அடங்கியுள்ளதாகத் தெரிகிறது.

குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லாத விடுதலை செய்யப்பட வேண்டியவர்கள் பற்றிய விபரங்களும் அந்த அறிக்கையில் உள்ளதாகவும் தெரிகிறது.

இந்த அறிக்கையை ஆராய்ந்தபின்னர் நாட்டின் பாதுகாப்புக்கு பொறுப்பானவர்வர் என்ற ரீதியில் ஜனாதிபதி இந்த இளைஞர்களின் எதிர்காலம் குறித்து பிரதி பாதுகாப்பு அமைச்சருடனும் மற்றும் உயர் அதிகாரிகளுடனும் அடுத்த வாரம் ஆலோசனை நடத்துவர் என்றும் அதன் பின்னர் தடுப்புக்காவலில்இருக்கும் இளைஞர்கள் சிலர் விடுதலை செய்யப்படுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### விமலராஜா விடுதலையாவார்?

அடுத்த வாரமளவில் விடுதலை செய்யப்பட இருக்கும் இளைஞர்களில் யாழ். பல்கலைக்கழக மாணவன் அப்புலிங்கம் விமலராஜாவும் ஒருவராக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [இ]

### 100 பேர் பலி!

புதுடில்லி ஜூன் 6

ஒரிஸாவில் ஏற்பட்ட புயலுக்கு இதுவரை 100 பேர் பலியாகியுள்ளதாக பின்னர் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் கைதான

## ஜோதீஸ்வரனுக்கு ஜூன் 19வரை றிமாண்ட்

(சென்னை)

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவர் என்று கருதப்படும் பிரபாகரன் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டபோது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில்காயமுற்று ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஜோதீஸ்வரன் அல்லது கண்ணன்நேற்று மீண்டும் சென்னை நீதிமன்றத்தில்ஆஜர் செய்யப்பட்டபோது இம்மாதம் 19ம் திகதி வரை அவரை றிமாண்டுல் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

பிரபாகரன், உமாகேஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## "தமிழரின்நாடு 'தமிழ் ஈழம்;' அது அமைவது உறுதி"

### வவுனியாவில் அரு. கோபாலன் நம்பிக்கை

(வவுனியா)

உலக நாடுகளிலேயே இறுதியாக தமிழன் ஆட்சி நடத்தி முடித்தது இலங்கையில்தான். அந்த வகையில் தமிழனுடைய முடி இங்கேதான் கடைசியாக இறக்கப்பட்டது. தமிழனுக்கு நாடு வேண்டும், சுதந்திரம் வேண்டும். தமிழனுடைய முடி கடைசியாக இறக்கப்பட்ட இலங்கையில் தமிழனுக்கு நாடு ஒன்று உதயமாகவுள்ளது. இதுவே தமிழ் ஈழமாகும்.

இவ்வாறு ஈழ தமிழக ஒருங்கிணைப்புச் செயலாளர் டாக்டர் அருகோபாலன் காந்தீயத்தின் ஆதரவில் வவனியா நகரசபை சபா மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு வைபவத்தில் கூறினர்.

காந்தீய அமைப்பு செயலாளர் டாக்டர் எஸ். இராசசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற விருந்து உபசாரத்தில் திரு. அரு. கோபாலன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழர்களுடைய நாடு தமிழ் ஈழமாக இருக்கும். இது அமைவது உறுதி. வெகு விரைவில் இப் பிரதேசத்தில் தமிழனுடைய கொடி பறக்கத்தான்

[8-ம் பக்கம் பார்க்க]

உ

## திருமண அழைப்பு



நிகழும் துந்துபி ஆண்டு வைகாசித்திங்கள் 24-ம் நாள் (7-6-1982) திங்கட்கிழமை முற்பகல் 11-10 மணிமுதல் பிற்பகல் 1-15 மணி வரையுள்ள சிங்க லக்கின சுபவேளையில்

| | |
|---|---|
| எமது சகோதரன் | எமது மகள் |
| திருநிறைசெல்வன் | திருநிறை செல்வி |
| சிவகுமாரனுக்கும் | சந்திரிகாவுக்கும் |

வண்ணை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் அமைந்துள்ள ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் திரும்மணம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் தாங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்துமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

மணமகனில்லத்தில் அன்று மாலை 5-30க்கு நடைபெறும் வரவேற்புபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்



கா. கு. தவராஜதேவாவும் பாரியாரும்
7, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

ச. கி. அம்பலவாணரும் பாரியாரும்
248 (622), மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.

3463

**DARMANANDA COLLEGE**
MARUTHANARMADAM
1982 NOV/DECE

**Day and Weekend Classes**
**Courses of:- I.C.M.A.** (Streem-I)
**I.A.A.** (New Syllabus Part-I
ஆரம்பம்:- 10-6-82 காலை 9-00
**I. A. B.** (Foundation, Inter Final Stages)
ஆரம்பம்:- 14-6-82 காலை 9-00
விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்க.
குறிப்பு:- ஆங்கில விரிவுரை இலவசம்
அச்சடிக்கப்பட்ட விளக்கக்குறிப்பு இலவசம்
எமது விரிவுரையாளர்கள்:-
R. இராஜகுலவீரசிங்கம், K. S. பரம்சோதி, T. சூரியகுமார், K. நாதன், S. கருணாநிதி (Visiting Lecturer) Miss சுப்பிரமணியம், B. தேவன், S. கணேசானந்தன்
விபரங்கட்கு
நிர்வாக அதிபர்
3439

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் ஒன்றரைப்பரப்பு வெறுங்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு கலா ஜோதி மில், 51/10, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 3372

வற்றாப்பளை அம்மன் கோவிலில் அமைந்திருக்கும் எமது விளம்பரநிலையத்தில், அண்ணா கோப்பி, அண்ணா பத்தி அண்ணா பற்பொடி, சோயாரின் மற்றும எமது உற்பத்திப் பொருட்களை வாங்கி இனாம் பொருட்களையும் பரிசுக் கூப்பன்களையும் பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். 3417

புனரமைக்கப்பெற்ற Honda C/90, C D 125 ருவின் செல்வ் ஸ்ராட்டர் மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3434

பனை தோட்டத்தில் மாங்காய் தொகையாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க நடராஜா, மனேஜர், பவர் அன் கொம்பனி, 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 3458

அல்சேஷன் × டோபமன் பிஞ்சர் கலப்பு இன நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. சிறந்த காவல் காக்கும் இனம் இல.20, ராசாவின் தோட்டம் ரோட் யாழ்ப்பாணம். 3452

அலிசேசன் ஆண்நாய்க்குட்டி (8 மாதம் விற்பனைக்குண்டு. உடன் நேரில் வரவும். விலை 1200/-. P. M. சர்மா, துளசி, சிவன்கோவில்வீதி, சாவகச்சேரி. 3442

மல்லாகம் கோணற்புலத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. K. சுப்பிரமணியம், V. H. லேன், இருபாலை. 3397

நீர்வேலியில் உள்ள அச்செழுவில் கவடிஒலை என்னுமிடத்தில் நல்ல நிலையிலுள்ள ஆறே முக்கால் பரப்புடனும், கிணற்றுடனும் கூடியவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி சின்னத்துரை, சிவா கிளினிக், வாகையடி, உடுப்பிட்டி. 3461

கச்சேரி நல்லூர் ரோட், மூத்தவிநாயகர் கோவில்ஒழுங்கையில் 3½ பரப்புக் காணியில் மின்சார, தண்ணீர் சகல வசதிகளுடன் கல்வீடு.உடன் விற்பனைக்குண்டு. S. சிவலிங்கம், C/o, E தம்பித்துரை, 6/12, மூத்தவிநாயகர் கோவில் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் ரோட், யாழ்ப்பாணம். 3429

25ஸ்ரீதொடர் இலக்கமுள்ள உழவு இயந்திரம் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: T. பூபாலசிங்கம், 548, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 3460

அல்சேசன் குறஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: விஜயரெட்ணம், 1/1, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். 3462

## விற்பனைக்கு

''இலட்சுமி வாசம்'', கட்டுடை மானிப்பாயில் உள்ள நாற்சார வீட்டு ஓடுகள், மரங்கள், தீராந்திகள், நிலைகள், கதவுகள் வேண்டுமாகில் நேரில்பார்வையிடலாம். காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை. தொடர்பு கொள்ள வேண்டியவிலாசம்: செ. கந்தசாமி, 45, ஈச்சமொட்டை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7055. [3467]

யாழ்ப்பாணம் கொழும்புத் துறையிலும், அரியாலையிலும் குறைந்த விலையில் காணிகள் வீடுகள் விற்பனைக்குண்டு. துரைரத்தினம், 50, பாரதி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 3457

கலர் ரி. வி. சொனி 20 (மொடல் இல: K V 2020 E) விற்பனைக்குண்டு. சமுத்திரா ரேட்ஸ், 23/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி:- 7236 [3438]

சாவகச்சேரி நகர எல்லைக்குள், சங்கத்தானை புகையிரத நிலையத்திற்கும் – ஆஸ்பத்திரிக்கும் சுமார் அரைமைல் தூரத்தில் தென்னை, பனை, ஒட்டுமா மரங்களுடன் வீடுகள் கட்டக்கூடிய நல்லசூழலில் 7 பரப்புக் காணி. ம.சுந்தரமூர்த்தி, 114, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 3449

நாவற்குளி புகையிரத நிலையத்திற்கு அண்மையில்கேரதீவு ரோட்டில் 8 பரப்புக் மேட்டுக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ளவும். கதிர் ஹாட்வெயர்ஸ், 11/1ஸ்ரான்லி வீதி, யாழ்ப்யாணம். 3466

## தேவை

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: க. பூபாலசிங்கம், சாரதாஸ், நெல்லியடி, கரவெட்டி, 3408

கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரிக்கு உயிரியல் விஞ்ஞானப்பட்டதாரிதேவை. அதிபருக்கு விண்ணப்பத்தை அனுப்பி விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும். 3423

நல்ல நிலைமையிலுள்ள E L 9000 அல்லது அதற்கு மேற்பட்ட Series கார் தேவை Morris Minor preferable. இலக்கம், விலை மற்றும் சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க: விளம்பரதாரர், 92, கண்டிவீதி, Opposite Pentecoastal கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம். 3453

சங்கானைக்கும் மானிப்பாய்க்கும் இடையிலுள்ள ஆங்கில மருந்துவகைகள் விற்கப்படும் ஸ்தாபனம் (Pharmacy) ஒன்றிற்கு பொறுப்பாக நின்று நடத்தக்கூடிய பெண் ஊழியர் தேவை. பிணைப்பணம்கட்டக் கூடியதாக இருத்தல் வேண்டும். அனுபவத்திற்கேற்ற ஊதியம் கொடுக்கப்படும். விளம்பர இல: 3468, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3468

## தேவை

Refrigerator Technicians (குளிர்சாதனப்பெட்டி மெக்கானிக்குகள்) குளிர்சாதனப் பெட்டிகள் திருத்துவதிலும், பெயின்ற் அடிப்பதிலும் நன்கு அனுபவமுள்ள மெக்கானிக்குகள் உடன் தேவை. திருப்திகரமாகச் சேவைசெய்தால் உற்பத்திச்சாலையில் பயிற்சி அளிக்கக்கூட ஒழுங்கு செய்யப்படும். அனுபவத்தையும், எதிர்பார்க்கும் சம்பளத்தையும் குறித்து நற்சான்றிதழ்களுடன் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3435

மோட்டார் சைக்கிள் மெக்கானிக் நன்கு – அனுபவமுள்ளவர்கள் மட்டுமே எதிர்பார்க்கும் ஊதியத்தைகுறித்து நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 3456

வான் சாரதி — நடுத்தர வயதுள்ளவாம், வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகளில் உதவிசெய்யக்கூடிய குடிப்பழக்கமில்லாதவர்களுமே நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3455

சகல வசதிகளுடன் கூடிய ஒரு சிறிய வீடு அல்லது பகுதி வீடு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்கு தேவை. யாழ் வேம்படி கல்லூரி, யாழ். மத்திய கல்லூரிகளுக்கு அருகாமையில் இருப்பது விரும்பத்தக்கது. தரகர்களுக்கு கொமிஷன் கொடுக்கப்படும். கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். விளம்பர இலக்கம்: 3451, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3451

ஸ்ருடியோவில் எல்லா வேலைகளும் தெரிந்த இளைஞரும் பழக ஆர்வமுள்ளவர்களும் தேவை. தரன்ஸ்ருடியோ, 9, நவீனசந்தை, யாழ்ப்பாணம். போன். 7858. 3444)

குழந்தையைப் பராமரிக்கக் கூடிய ஒருவர் (பெண்) உடன் தேவை. தகுந்த வேதனம் வழங்கப்படும். விளம்பர இல: 3421, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3421

## சோதிடம்

வெளிநாடு செல்லுதல், திருமணம், கல்வி, உத்தியோகம் முதலியன. குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. கே.எல்.எம். கிருஷ்ணபிள்ளை ஸ்ரீ பராசக்தி சோதிட நிலையம், 87, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 3212

## வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதி, 63 ம் இலக்கத்தில் அமைந்துள்ள கடை ஒன்று வாடகைக்கு உண்டு தொடர்பு: திருமதி க. சபாரத்தினம், 63, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3415

## தவறிவிட்டது

சங்கானை ஆஸ்பத்திரி சந்திக்கும் மயானத்திற்குமிடையில், 3-6-82மாலை 'சார் லைசென்ஸ்' தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து இ. நடேசன் ஜே. பி., சங்கானை, என்பவரிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 3469

## இந்து சமய அறிவுப்போட்டி முடிவுகள்

(மாவிட்டபுரம்)

மாதகல் இந்துசமய அபிவிருத்திச் சங்கம் நடாத்திய சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் பின் வருமாறு:

முதலாவது பரிசு; செந்தில் நாதன் அருந்ததி, இரண்டாவது பரிசு: சா. உருத்திரபசுபதி. மூன்றாவது பரிசு: ச சோமசுந்தரம்.

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தில் வைத்து பிரம்மஸ்ரீ பி. பா. தியாகராஜக் குருக்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

நயினை

## தில்லைவெளி பொங்கல் உற்சவம்

(நயினாதீவு)

நயினாதீவு தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் வைகாசி விசாக தினப் பொங்கல் உற்சவம் நேற்று ஆரம்பமானது. தொடர்ந்துவரும் நாட்களில் அபிஷேகம் இடம்பெற்று 12ம் திகதி சனிக்கிழமை பொங்கல் நடைபெறுவதுடன் நிறைவுறும். இவ்வுற்சவ நிகழ்ச்சிகளை சிவஸ்ரீ பரமசாமிக் குருக்கள் நடாத்தி வைப்பார்.

## திருமண சேவை

மணமகனா! மணமகளா!

யாழ். இந்து வேளாளர், உயர் பதவி முதல் சாதாரண பதவி வரையிலான மணமக்கள் (ஆண் – பெண்) எம்மிடம் இருக்கிறார்கள். சுயவிலாசமிட்ட கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். T. சற்குணநாதன், 6, விதானை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். 3464

## மீண்டும் வேலைவாய்ப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மீண்டும் பழைய முறைப்படி ஐ தே. கட்சி ஆதரவாளர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவு ஐ. தே. கட்சியின் மன்னார் மாவட்ட மத்திய குழுவினால் மன்னார் மாவட்டத்தில் அபிவிருத்தியை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தம்மைச் சந்தித்த மன்னார் மாவட்ட ஐ.தே கட்சியின் பொதுச் செயலாளர் உறுதியளித்துள்ளார். (இ)

## தங்கச் சங்கிலி மீட்கப்பட்டது

(மாவிட்டபுரம்)

சங்கானையில் திருடப்பட்ட தங்கச் சங்கிலி மீட்கப்பட்டதுடன் அதுதொடர்பாக நபர் ஒருவரும் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

சங்கானையைச் சேர்ந்த எஸ். கந்தசாமி என்பவரது 4000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி திருடப்பட்டதுதொடர்பாக விசாரணை செய்த காங்கேசன்துறைப் பொலிசார் கார்த்திகேசு கந்தசாமி என்னும் சந்தேக நபரைந் விசாரணை செய்தனர் அத்துடன் பாலரவி, இரத்தினம், மோகனதாஸ் ஆகியோரையும் விசாரணைக்குட்படுத்தினர்.

இதன்பயனாக திருட்டுச் சங்கிலி மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரான கார்த்திகேசு கந்தசாமியை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பில் உள்ள உத்தரவு பெற்ற வியாபாரியின் ஸ்தாபனத்துக்குரிய உணவு முத்திரையின் 8 அடிக் கட்டைத் துண்டுகளை யாழ். பஸ் நிலையத்தில் பஸ் நடத்துநர் திரு. காசிப்பிள்ளை கண்டெடுத்து ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

## விற்பனையாளர்கள் தேவை

பின்வரும் இடங்களுக்கு 'ஈழநாடு' விற்பனை செய்வதில், ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முற்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

- ★ துணுக்காய் ★ வவனியா
- ★ முறிகண்டி ★ மாங்குளம்
- ★ நெடுந்தீவு ★ அல்லைப்பிட்டி

பொதுமுகாமையாளர்
ஈழநாடு, யாழ்ப்பாணம்.
3436

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

## கேள்வி கோரல்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கூட்டுப் பன்முகப் பணிமனை
(Co-op Complex)

### இரண்டாம் மாடி தளம்

**5250 சதுர அடி**

20 இரட்டைப் படுக்கையறை, 15 ஒற்றைப்படுக்கையறை, உணவருந்தும் மண்டபம், சமையற்கூடம் கொண்ட நவீன விடுதிச்சாலை (Hotel) நடாத்தப் போதுமானது. (5250 சதுர அடி)

அல்லது

**525 சதுர அடி கொண்ட**
**அலுவலக அறைகள் பத்து (10)**

ரூபா 100/- செலுத்தி கேள்விப் பத்திரங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெறவும்.

பொதுமுகாமையாளர்

74/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 3465

### போர்நிறுத்த தீர்மானத்துக்கு

# பிரிட்டன் - அமெரிக்கா

# கூட்டாகத் தடை!

## ஆர்ஜென்டீனுவை சரணடையக்கோரி தொடர்ந்து வற்புறுத்தல்

லண்ட, ஜூன். 5

**போக்லண்டில் யுத்தத்தை நிறுத்தும்படி ஆர்ஜென்டீனுவையும் பிரிட்டனையும் கோரும்பிரேரணைஒன்று நேற்றுஐ.நா.சபையில்சமர்ப்பிக்கப்பட்ட போது பிரிட்டனும் அமெரிக்காவும் தமது 'வீட்டோ' அதிகாரத்தை பிரயோகித்து ரத்து செய்தன.**

இப்பிரேரணையை ஸ்பெயினும் பனமாவும் கூட்டாக சமர்ப்பித்து இருந்தன,

ஆர்ஜென்டீனு துருப்புக்கள் போக்லண்டில் இருந்து வாபசாகுவதற்கான கால நேரம் பற்றி இப்பிரேரணையில் குறிப்பிடப்படாதபடியால் தாம் 'வீட்டோ' செய்வதாக பிரிட்டிஷ் பிரதிநிதி இப்பிரேரணை மீது பேசுகையில் தெரிவித்தார்

9 நாடுகள் இப்பிரேரணைக்கு ஆறுதலாகவும் பிரான்ஸ் உட்பட 4 நாடுகள் எதிர்த்தும் வாக்களித்தன.

இப்பிரேரணை குறித்துஅமெரிக்க இராஜாங்க அமைச்சர் திரு. அலெக்ஸாண்டர் ஹேக் கருத்துத் தெரிவிக்கையில் ''இரத்தக்களரியை தவிர்க்கக் கூடிய பிரேரணையாக இது அமையவில்லை'' என்ருர்.

**பருவகாலம் சாதகமில்லை**

இதேவேளையில் போட் ஸ்ரான்லியை தாக்க இப்போது காப்பு அமைச்சு அறிவித்துள் அங்குள்ள கால நேரம் சரி ளது யில்லை என பிரிட்டிஷ் பாது அதேநேரத்தில் ஆர்ஜென்டீனு துருப்புகளை சரணடையும்படி வேண்டுகோள் விடுக்கும் துண்டுப் பிரசுரங்களை பிரிட்டன் போக்லண்டில் வீசி வருகிறது. இதுவரை இத்துண்டுப் பிரசுரங்கள் குறித்து ஆர்ஜென்டீனு எந்தவித கருத்தும் வெளியிடவில்லை. (கு)

---

### தமிழ்நாட்டு வானொலிகளில்

## 'ஆகாஷவாணி' என்ற சொல்லை நீக்க பிரதமர் இந்திரா இணக்கம்

சென்னை, யூன் 5

தமிழ்நாட்டில் இனிமேல் வானொலியில் ''ஆகாசவாணி'' என்றசொல் பயன்படுத்தப்படமாட்டாது என பிரதமர் இந்திரா அறிவித்துள்ளார். ஆகாசவாணி என்பது ஹிந்தி சொல் என தமிழ்நாட்டில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே.

இந்திராவின் அறிவித்தலை வரவேற்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எம்.ஜி. இராமச்சந்திரன் தெரிவிக்கையில் தக்கசமயத்தில் பிரதமர் தலையிட்டுள்ளார் என்றும் அச்சத்தை நீக்கிய ஒரு துணிச்சலான நடவடிக்கைஎனவும் பாராட்டினுர்.

தி. மு. க. தலைவர் திரு மு. கருணுநிதி தெரிவிக்கையில் பிரதமர் இந்திராவின் அறிவித்தல் தமிழ்நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சிதருறது என்ருர்.

புதுடில்லியைத்த விர்ந்த ஏனையமானிலங்களில் குறிப்பாக தென் மாநிலங்களில் உள்ள இந்தியவானொலி நிலையங்கள் தமது அறிவிப்புக்களில் 'ஆல் இந்தியா றேடியோ' என்று குறிப்பிட்டுவந்தது அண்மையில் நிறுத்தப்பட்டு புதுடில்லியில் அறிவிக்கப்படுவது போல் 'ஆகாஷவாணி' என்றே அறிவிக்கவேண்டும் என விடுக்கப்பட்ட பணிப்புரையை அடுத்து தமிழ் நாட்டிலும்ஏனையமானிலங்களிலும் கடும் எதிர்ப்பு எழுந்தது. 'ஆகாஷவாணி' என்பது ஹிந்தி சொல் என்றும் இதனை ஹிந்திபேசாத மக்கள் மீது திணிக்கவேண்டாம் என்றும் கோரப்பட்டது.

இந்தக்கோரிக்கையை பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி ஏற்றுக் கொண்டு மீண்டும் 'ஆல் இந்தியா றேடியோ' வுக்கு அனுமதியளித்துள்ளார். இது அவர் மீது சிறுபான்மை மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையைப் பலப்படுத்துவதாக அமைந்துள்ளது எனக்கருதப்படுகின்றது.

இதேபோல தொலைக்காட்சியைக் குறிக்கும் 'தூர்தர்ஷன்' என்ற இந்தி சொல்லையும் நீக்கும்படி கோரப்பட்டுவருகின்றது.

உலக செய்திகளை ஒலிபரப்பும் பிரிட்டிஷ், அமெரிக்கா, சோவியத், சீனு, வானொலிநியங்கள் தமது தலைநகர்களின் பெயர்களையே குறிப்பிடுகின்றன. என்பது குறுப்பிடத்தக்கது.

---

### தீ விபத்து

சென்னை, யூன் 5

மாவல்லபுரத்தில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் 20 வீடுகளும், ஒரு சினிமாப்படக் கொட்டகையும் எரிந்து நாசமாகின. அப்போது காட்சிகள் எதுவும் இடம்பெறவில்லை சேதார உத்தேச மதிப்பீடு 2 லட்சம் ருபா என தெரிய வருகிறது. செங்கல்பட்டு மாவட்ட உதவிக்கலெக்டர் நிவாரணப்பணிகளை கவனித்து வருகின்ருர்.

இதேநேரத்தில் சென்னையில் உள்ள சைனுபஜாரில் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் 4 கடைகள் எரிந்து நாசமாகின 3 கடைகள் பலத்த சேதத்திற்குள்ளாகின (கு)

---

### ஒரிசாவில்

## புயலில் 76 பேர் மரணம்! 1000 வீடுகள் தரைமட்டம்!

புதுடில்லி, ஜூன் 5

கடந்த வியாழக்கிழமை ஒரிசாவில் வீசிய திடீர் புயலில் 76 பேர் இறந்ததாகவும், சுமார் 1000 வீடுகள் தரைமட்டமாகியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன

டாக்டர்கள் குழுவொன்று பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்து வைத்திய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நிவாரண வேலைகள் அங்கு ஒரு வாரத்துக்கு மேல் மேற்கொள்ளப்படவேண்டியிருக்கும் எனவும் தெரியவருகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு 1500 ரூபா நிவாரண நிதயாக வழங்கப்படுகின்றது.

ஒரிசா முதலமைச்சர் திரு பட்ஞயக் நிவாரண வேலைகளைக் கவனிப்பதற்காக உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவைப் பாதிக்கப்பட்ட இடங்கலுக்கு அனுப்பியுள்ளார். அதே நேரத்தில் பாதிப்பு மதிப்பீடுகுறித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி மாவட்ட கலெக்டர்களுக்கு ஒரிசா முதலமைச்சர் பணித்துள்ளார்.

---

## இந்திய ஜனுதிபதி தேர்தல் ஜூலை 12ல்

புதுடில்லி ஜூன் 4

இந்தியாவின்குடியரசுத்தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் அடுத்த மாதம் 12ம்திகதி நடைபெறும் என்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையார் திரு.எஸ். எல். சக்தார் தெரிவித்துள்ளார்.

இப்போதைய ஜனுதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டியின் பதவிக்காலம் இம் மாதம் 24ம் திகதி முடிவடைகிறது. புதிய ஜனுதிபதி தேர்தல் முடிவுகள் அடுத்த மாதம் 18ம் திகதி அறிவிக்கப்படும்.

ஜனுதிபதி பதவிக்குப் போட்டி இல்லாதிருக்குமாயின் இம்மாதம் 26ம் திகதியே புதிய ஜனுதிபதியார் என்பது தெரிந்துவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது

இத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத்தாக்கல் செய்யும் கடைசித்தினம் இம்மாதம்23ம் திகதியாகும்.

---

### புனர்வாழ்வுக்காக

## தாயகம்திரும்புவோர் பிரச்னை தேசியப் பிரச்னையாகும்

### தமிழ்நாடுதலைமைச்செயலாளர்கருத்து

சென்னை , ஜூன். 5

இலங்கையிலிருந்து புனர்வாழ்வுக்காக தாயகம் திரும்புவர்களுக்கு ராமநாதபுரத்தில் விவசாயப் பண்ணை அமைக்க 30 இலட்சம் ரூபா ஒதுக்கித் தரும்படி மத்திய அரசை தமிழ்நாடு அரசு கோரியுள்ளது.

இதுகுறித்து ஆராய தமிழ்நாடு தலைமைச் செயலாளர் திரு. திரவியம் கூட்டியமாநாட்டில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. தோமஸ் ஏபிரகாமும் கலந்து கொண்டார்.

திரு. திரவியம் பேசுகையில் இலங்சையிலிருந்து புனர்வாழ்வுக்காக தாயகம் திரும்புவோர் பிரச்னை தமிழ்நாட்டுக்கு மாத்திரம் உரியதில்லை. இது ஒரு தேசியப் பிரச்னை கிராமப் புறங்களில் வீடுகட்டுவதற்கு வழங்கப்படும் 3000 ரூபாவை 4000 ரூபாவாக உயர்த்த வேண்டும் என்றும் நகர்ப்புறத்தில் வீடுகட்டுபவர்களுக்கு 6000 ரூபாவை 8000 ரூபாவாக உயர்த்தவேண்டும் எனவும் உத்தேச விவசாயப்பண்ணையில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் 106 ரூபா சலுகை ஊதியமாக வழங்க வேண்டும் எனதுவும் தெரிவித்தார்,

1964 ம் ஆண்டு சிறிமா–சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் புனர்வாழ்வுக்காக இந்தியா திரும்பியவர்களில் 68 ஆயிரம் குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்ருர். (கு

---

### எவரெஸ்ட் வீரர்களுக்கு வரவேற்பு

புதுடில்லி, யூன். 5

எவரெஸ்ட் சிகரத்தில ஏறிய 16 பேரைக் கொண்ட சோவியத் குழுவுக்கு புதுடில்லியில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதேநேரத்தில் உலகப்பத்திரிகையாளர்களைக் கொண்ட மாநாடு ஒன்று சோவியத்தில் ஆரம்பமாகியுள்ளது. ''உத்தியோகப்பற்றற்ற சமாதானக் குழு'' என இம்மாநாட்டை பல நாடுகள்வர்ணித்துள்ளன. (கு)

---

### வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு புனித அந்தோனியார் ஆலயவருடாந்த உற்சவம்கொடியேற்றத்துடன்ஆரம்பமானது.

ஊரெழு புனித அந்தோனியார் பங்குத் தந்தை அருட்திரு இ. தி. தேவராஜன் அடிகளார் கொடியேற்றத்தை நடத்தி வைத்தார்.

ஒன்பது தினங்கள் நடைபெறும் நவநாள் வழிபாட்டுடன் உற்சவதினமான 13–ம் திகதி காலை திருநாள் கூட்டுப்பலி பூஜையும், திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் இடம் பெறும்.

---

### தீ விபத்து

(கொழும்பு)

கற்பிட்டியில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தில் 50 மீனவர் குடும்பங்களின் குடிசைகள் எரிந்து நாசமாகின்.

உத்தேச மதிப்பீடு 6 லட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகின்றது.

புனர்வாழ்வு நடவடிக்கைகளை சவனிக்க மீன்பிடி அமைச்கர் திரு, பெஸ்டஸ் பெரேரா உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார். (கு)

---

### வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

(நயினுதீவு)

யாழ்.அபிவுருத்தி சபை நயினுதீவு உப அலுவலகத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் 5000 ரூபாவை காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஒதுக்கிக் கொடுத்துள்ளார். இப்பணம் ஆலம்குளம் வீதியின் புனரமைப்பு வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

# அற்பமான மனித உயிருக்கு தமிழை ஒப்பிடலாமா?

''தமிழிற்கும் அமுதென்றுபேர் —அந்த தமிழ் **எங்கள் உயிருக்குநேர்''**

பாவேந்தர் பாரதிதாசன் இவ்வாறு முழக்கமிட்டது வெறும் ஓசை நயத்துக்காக மாத்திரமே என்று சிலர் வாதிடமுனைகிறார்கள்.

இன்னும்சிலர் இது இன உணர்ச்சியைத் தூண்டும் கவிதைவரிகள் இளைஞர்களுக்கு இன வெறியை ஊட்டுவதற்கே இதுபயன்படும் என்கிறார்கள்.

இன்னொருசாராரோ வெனில், மனிதன் அற்ப ஆயுளைக் கொண்டவன் ஒரு நூறுவருடங்கள் கூட இவன் நீடித்து வாழ்வான் என்று கூறிவிட முடியாது. அவ்வாறான ஒருவனின் உயிருக்கு தமிழைநேர் என ஒப்பிட்டுப்பாடலாமா— தமிழ் என்ன அப்படி அற்ப ஆயுள் கொண்ட மொழிதானா என்று வினவுகிறார்கள்.

தமிழ் (எங்கள்) தமிழினத்தின் உயிருக்குநேர் என்றே பாரதிதாசன் கூறுகின்றார். தனிமனிதனின் அற்ப ஆயுளுக்குத்தமிழை அவர் ஒப்பிடவில்லை.

ஒருசமுதாயத்தின் உயிர் போன்றது ஒருமொழி.

தனிமனிதனானவன் தன் உயிர்போனதும் உடலும் அழிந்து மறைந்துவிடுகின்றான்.

அதேவகையில் ஒரு சமுதாயத்தின் உயிராகிய மொழி அழிக்கப்படுமானால் அந்த சமுதாயமாகிய உடலும் அழிந்துபோய்விடும். பிறகு அப்படி ஒருசமுதாயம் உலகில் இருந்ததற்கான அறிகுறியும் கூட இல்லாமல் போய்விடும். எனவேதான் தமிழ் ஆகிய உயர்உலகில் நீடித்து இருக்கும்வரை தமிழர் என்ற ஒரு இனமும் இருக்கமுடியும் என்ற கருத்தில் ''அது எங்கள் உயிருக்குநேர்'' என்றுபாவேந்தர் பாடினார்.

உயர்ந்த கவிஞர்களின் பாடல்கள் சிலசமயம் தனிமனிதனுக்கு உணர்வூட்டுவனவாக விருந்தாலும் பொதுவாகவே அவை சமுதாயக் கருத்துக்களைக் கொண்டவையாகவே இருக்கின்றன.

மொழியைபாதுகாக்க வேண்டும் என்று கூறும்போது மொழியென்ன அது மனிதனின் கருத்தைவெளியிடுவதற்கான ஒரு கருவிதானே அதைவிட மனிதன் உயிர்வாழ்வதற்கான விடயங்களே முக்கியம் என்று வாதிடுவதில் அர்த்தமிருக்கலாம்— ஆனால் ஒரு இனம், சமூகம், என்று பிரித்துமனிதரைகணிக்கும்போது மொழி தேவைபடுகிறது.

மொழி இல்லையெனில் இனம் இல்லை.

ஓர் இனம் தனக்கென தனியான கலைகலாச்சாரங்களைப் பேணிக்கொண்டு உணர்வோடு உயர்வாழ்வதாயின் அதன் உயிரான மொழிபாதுகாப்புடன் இருக்கவேண்டும் மொழி அழியுமானால் இனமாகிய அதன் உடலும்அழிந்துவிடும்.

''தமிழுக்கு அமுதென்று பேர்'' என்றார் கவிஞர்.

'பேனா'

இது பொதுவாக தமிழர் மத்தியில் வழங்கிவரும் அடைமொழியையே பாவேந்தர் தம் கவிதையின் முதல்வரியாகக்கொண்டார். ஆனால் அதிலும் கருத்தோட்டத்தைக் காணலாம்.

அமுது தேவர்களுக்குரியது அதிமேலான சுவையுடையது, தேவர்களின் உணவாகிய சுவைமிக்க அமுதுபோன்றது தமிழ்மொழிஎன்று கூறிவிட்டால் மாத்திரம் பொருள் அமையாது.

தேவர்கள் நீடித்து உயிர் வாழ்வதற்காக அருந்துவது அமுது.

அங்ஙனம் சுவையாலும். தேவர்கள் நீடித்து உயர்வாழ்வதற்காக அருந்துவதாலும் சிறப்புப்பெற்ற தான அமுது, தமிழ்மொழியின் இன்னொரு பெயருமாகும்.

எனவே தேவர்கள் நீடித்து வாழஉதவும் அமுதுபோன்ற எமது தமிழ்மொழியானது தமிழர்களாகிய எமது உயிருமாகும். இந்தமொழியில்லையெனில் நாம் தமிழர் என்று எங்கனம்கூறிக்கொள்ள முடியும்!.

இதையே பாவேந்தர் பாரதிதாசனார்,

''தமிழுக்கு அமுதென்று
பேர்
அந்தத்தமிழ்
எங்கள்உயிருக்குநேர்''

என்றார்.

# மகாகவி பாரதியாரின் சில முரண்பாடான கருத்துக்கள்

## ஒரு விஞ்ஞான கண்ணோட்டம்

சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு காலமாகிய இந்த ஆண்டிலே, அவரின் பாடல்களின் நயத்தினைப் பலர் பலகோணங்களிலிருந்து பார்ப்பது இயல்பு. இக்கட்டுரையில் பாரதியாரின் பாடல்களில் காணப்படும் விலங்குகள், தாவரங்கள், விஞ்ஞானம், தொழில் நுட்பம் போன்றவற்றினைப் பற்றிய கருத்துக்களை விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் காணவிழைவோம்.

''வானையளப்போம்'' என்றும் ''சந்திர மண்டலத்தைக் கண்டு தெளிவோம்'' என்றும் ''மண்ணில் தெரியுது வானம் அது நம் வசப்படலாகாதோ'' என்றும் விண்ணைப்பற்றி விஞ்ஞான ரீதியாக விவரித்த பாரதி, ''விண்ணின் றெம்மை வானவர் காப்பார், மேவிப் பார் மிசைக் காப்பவர் நீரே'' என்று பாடுவது அவரது எண்ணங்கள் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதைக் காணமுடிகிறது.

### பாரதியின் வினா

''இந்தப் புவிதனில் வாழும் மரங்களும், இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும், அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும், ஔடத மூலிகை, பூண்டு. புல் யாவும் எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ?'' என்ற வினாவுக்கு விடையை எம்மிடமே விட்டு விடார் பாரதியார். உடலில் உள்ள எல்லாயிரினங்களிலும் தாவரங்களே தமது உணவைத் தயாரிக்கின்றன. இதற்காகத்தாவரங்களில் பச்சையம் எனப்படும் பதார்த்தம்இருக்கின்றது. ஏனைய உயிரினங்கள் மனிதனும் கூட, தாவரங்களிலிருந்தே நேரடியாகவோ, மறைமுகமாகவோ தமது உணவை எடுத்துக் கொள்கின்றன. பாரதியார் இக்கருத்தினைக் கூறியிருந்தால் இது அவருடைய வினாவுக்கு விடயாக அமைந்து அது முற்றுப் பெற்றிருக்கும். எனவே அவரது வினாவுக்கு சரியான விடை அவரால் காணப்படவில்லை.

''மானுடர் உழாவிடினும், வித்து நடாவிடினும், வரம்பு கட்டாவிடினும், அன்றி நீர் பாய்ச்சாவிடினும் வானுலகு நீர் தருமால் மண்மீது மரங்கள் வகைவகையாக நெற்கள், புற்கள் மலிந்திருக்குமன்றே'' எனப்பாரதியார் பாடுகிறார். இது ஒரு தவறான அபிப்பியாயம். புற்கள் வளரலாம். நெற்கள் அப்படியல்ல. நெற்கள் செயற்கையாகவே (hybridzation மூலமாக உற்பத்திபாக்கப்பட்டன. மனிதன் இல்லாவிட்டால் இன்று நெற்கள் உற்பத்தியாகி இருக்க முடியாது. மனிதனுக்கு உபயோகமற்ற புற்கள், மரங்கள் தாமாகவே உற்பத்தியானாலும், நெற்கதிர்கள் உற்பத்தியாவதற்கு மனிதனின் புத்தி வேண்டடப்பட்டது இப்போதும் பலமுறைப்பட்ட இனப்பெருக்க ஆய்வுமூலம் H4, IR8, BG9i 2, BG 11-11, LD 66 என்ற சிறந்த நெல்வர்க்கங்கள் இலங்கையில் இருக்கின்றன இவை தாமாகவே வளர்ந்ததல்லவே எனவே நெற்கதிர்கள் தாமாகவே மலிந்திருக்கும் என்று சொல்ல முடியாது.

''வஞ்சனைப் பேய்களென்பார் இந்த மரத்திலென்பார் அந்தக் குளத்திலென்பார் துஞ்சுது முகட்டிலென்பார் மிகத்துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார். ''செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம் சேர்ந்திடலாமென்று எண்ணியிருப்பார் பித்த மனிதர் அவர் சொல்லும் சாத்திரம் பேயுரையாமென்றிங்கு ஊதடா சங்கே என்று கூறிய பாரதி, நம்பிக்கையற்ற பிற்போக்கான கருத்துக்களைக் கொண்டிருப்பது ஆங்காங்கே அவரின்யில் பாடல்கள் மூலம் தெரிகின்றது. உதாரணமாக விதி, காலன், மறுபிறவி, வரங்கள், தவம், வேள்வி, இந்திரன், மந்திரம் ஆகியன விஞ்ஞான கருத்தில் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாகும்.

ஆனால் வானொலி இத்தாலியிலே 18?5ம் ஆண்டு ஜி. மார்கோனி என்பவரால் உற்பத்தியாக்கப்பட்டது. 1882ம் ஆண்டு பிறந்த பாரதியாருக்கு அப்போது வயது 13. பெரும்பாலும் இதற்குப் பல காலத்திற்குப் பின்புதான் அவர் இப்பாடலைப் பாடியிருப்பார் எனவே இப்படிப்பட்ட ஒரு கருவி இருப்பது என்று தெரியாமல் இப்படிப்பட்ட ஒரு கருவி செய்வோம். என்று பாடியிருந்தால் அது அவருடைய குறை எனினும் இக் கருவி இந்தியாவிலே செய்யப்பட வேண்டுமென்று கருதிப் பாடியிருந்தார் என்று எண்ணி சமாதானப்பட வேண்டியிருக்கிறது.

பாரதியார் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, எங்கள் அறிவியலைப்பாவித்து விஞ்ஞான தொழில் நுட்ப முறை முன்னேற்றும்படி அடிக்கடி வலியுறுத்தியிருப்பதைப் பல பாடல்களில் காணலாம்.

''இரும்பைக் காய்ச்சி
உருக்கிடுவீரே
[illegible] திரங்கள்
வகுத்திடுவீரே
கரும்பைச்சாறு
பிழிந்திடுவீரே
கடலில் மூழ்கி
நன்முத்தெடுப்பீரே
அரும்பும் வேர்வை
உதிர்த்துப்புவிமேல்
ஆயிரந் தொழில்
செய்திடுவீரே''

''மண்ணெடுத்துக்
குடங்கள் செய்வீரே
மரத்தை வெட்டி
மனைசெய்வீரே
உண்ணக்காய்கனி
தந்திடுவீரே
உழுது நன்செய் [illegible]
பயிரிடுவீரே
எண்ணெய் பால் நெய்
கொணர்ந்திடுவீரே
இழையை நூற்றுடை
செய்திடுவீரே''

''வெட்டுக்கனிகள் செய்து
தங்கம் முதலாம்
வேறு பொருட்களும்
குடைந்தெடுப்போம்
ஆயுதம் செய்வோம்
காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்
கல்விச்சாலைகள் வைப்
போம்.

''குடைகள் செய்வோம்
உழுபடைகள் செய்வோம்
கேணிகள் செய்வோம்
இரும்பாணிகள் செய்வோம்
சந்தி தெருப் பெருக்கும்
சாத்திரம் கற்போம்
காடு வளர்ப்போம்
ஓவியம் செய்வோம்
நல்ல ஊசிகள் செய்வோம்''

''வான்மழை இல்லையென்றால் வாழ்வுண்டோ, பயிரினைக் காக்கும் மழையென எங்களைப் பாவித்து நித்தம் வளர்க்கவென்றே'' என்று கூறிய பாரதியார் மழையொன்றே பயிருக்கு அவசியமெனக் கருதுகிறார். இதுவும் தவறான கருத்தாகும். பயிர் வளர்ந்துநன்மை தரவேண்டுமானால்அவற்றிற்கு நல்லநிலம், நீர், உரம், ஒட்சிசன், கார்பன்றொட்சைட் நிறைந்த காற்றோட்டம், சூரிய வெளிச்சம், களைகள் பூச்சி புழுக்கள் குறைந்தநிலை ஆகியவற்றைக்குறிப்பிடலாம் பாரதியார் குறிப்பிடுவதுபோல் நீர் இருந்தால் மட்டும் பயிர்கள் வளரும் என்று கருதமுடியாது.

''பொல்லாப் புழுவினைக் கொல்ல நினைத்தபின் புத்தி மயக்கமுண்டோ'' எனப்பாரதியார் பாட்டில் பொல்லாப் புழுவினைக் கருதுகின்றார். ஆனால் பொல்லாப் புழுக்களையும், பொல்லாப் பூச்சிகளையும் ஓரேயடியாகக் கொல்லுதல் சிறந்ததாக இன்று அமையவில்லை. இவற்றைத் தொடர்ந்தும் பெருகாமல் கட்டுப்படுத்துவதே சிறந்த மாற்று மருந்தாகும். இக்கருத்தினை பீடை நிர்வாகம் என இப்போது குறிப்பிடுகிறார்கள். புழுக்களை அறவே அழிப்பதினால் இயற்கைச் சமநிலையில் எவ்வளவோ பிரச்னைகள் இன்று உண்டாகின்றதென்பது விஞ்ஞானிகள் காணும் உண்மை.

சாதாரணமாக நாங்கள் மற்றைய மனிதரைத் தாக்கிப் பேசும் போது ''மடையர்'' ''பேயன்'' என்று சொல்வதற்கு பதிலாக மிருகங்களின் பெயர் சொல்லியே உதாரணமாக குரங்கு பன்றி என்று சொல்கிறோம். இதையே பாரதியார் கையாண்டு 'பாமரராய்' ''விலங்குகளாய்'' 'உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லப் பான்மை கேட்டு' என்றும், ''எத்தித் திரியுமந்தக்காக்கை' என்றும் ''பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றில் படுத்துப் புரளாதே'' என்றும் கூறியிருக்கிறார்.

மிருகங்கள் எல்லாம் தனிப்பட்ட முறையில் நல்லவைகளே மனிதனில் இல்லாத சில சிறந்த குணங்கள்சில மிருகங்களில் காணலாம். மிருகங்கள் மனிதனால் தாக்கப்படுவதினால் தான் மிருகங்கள் மனிதனைத் தாக்குகின்றன, எனவே மிருகங்களை தன்பாட்டில் வாழவிட்டால் அவை ஏனைய உயிரினங்களுடன் சமூகமாக வாழத் தகுந்தவையாகும். மிருகங்களின் பெயரைச் சொல்லி மனிதன் செய்யும் குற்றங்களைக் குறிப்பிடுவது மிருகங்களை இழிவு படுத்துவதாகும்,

''காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' என்று பாடிய பாரதியார் மனதில் 'வானொலி' பற்றிய கருத்து உதித்திருக்கிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் வி. க. கணேசலிங்கம்

# நயினை தில்லைவெளிஸ்ரீபிடாரி அம்பாள் வைகாசிப்பொங்கல்


நயினாதீவின் தென்மேற்கு திசையில் அமைந்துள்ள தில்லைவெளி என்றஇடத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளாள் ஸ்ரீ பிடாரி அம்பாள். தேவி பள்ளிகொண்டிருக்கும் தில்லைவெளியை அடுத்துக் காணப்படும் கடலானது இராமேசுவரனின் பாதம் மருவிய மென்னீரை அலைகளாக்கித் தேவியின் சந்நிதானத்தின்பால் கொணர்கிறது. இப்படியாகவே இங்கு காணப்படும் அதாவது அடியார்களால்பூசிக்கப்பட்டுவரும் மூலவிக்கிரகமும் தில்லையம்பதியில் இருந்து இராமேஸ்வரம் கடல்வழியே மிதந்துவந்து கரையில் நிலை கொண்டது இப்பகுதியே தில்லைவெளி என இன்று அழைக்ப்பட்டு வருகிறது. கரையொதுங்கிய மூலவிக்கிரகத்தை அவ்வழி வந்த திரு. ஆறுமுககம் என்பாரும் மற்றும் சிலரும் கண்டு அதனைப் பிரதிஷ்டை செய்வித்துக் கோவில் அமைத்து வழிபடலானார்கள். திரு. ஆறுமுகத்தின் பின்னர் அவரது பிள்ளைகளான திருவாளர்கள் வல்லிபுரம், கதிரவேலு, நாகமணி, சிவசம்பு ஆகியோர் பராமரிக்கப்பட்டுத் தற்போது சிவசம்பு அவர்களது புத்திரர்களால் நிர்வகிக்கப்பட்டுவருகின்றது.

இக்கோவில் ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தது. இங்கு நித்திய பூசையும் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் விசேட பூசைகளும் இடம்பெற்று வருகின்றது. நயினையூர் மக்கள் அனைவரும் பிடாரியினிடத்தில் அளவற்ற நம்பிக்கை கொண்டு வணங்கி வருகிறார்கள்.

ஆண்டாண்டுவரும் வைகாசி மாதத்திலே பொங்கல் விழா எடுத்து தமது நன்றிக்கடனைச் செலுத்துவதுபோல் இத்தீவின் மக்கள் அனைவரும் பொங்கல் செய்து, இன்சுவைப்பண்டங்கள், முக்கனிகள் ஆகியன வெல்லாம் படைத்து வழிபடுவார்கள். ஆலய முன்புறமாக நீண்ட தூரம்வரை அமைக்கப்படும் மண்டபத்திலே இருபுறமும் அடியார்கள் தமதுபடைப்புப் பொருட்களை அம்பிகையின் உணவுக்காக அளித்து தம்மை மெய்மறந்த நிலையில் அம்பிகையிடத்தில்அர்ப்பணித்திருப்பர்.

இக்கோவில் கடந்த 4ம்திகதி ஆரம்பமாகி பொங்கல் 12ம் திகதி முடிவடையும்.

[நயி. நிரு]



திருக்கோணமலை மாவட்டத்தில் பனம்பொருள் அபிவிருத்தி சம்பந்தமாக அண்மையில் இலங்கைப் பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவரினலும், திருமலை அரசாங்க அதிபரினலும் திருமலைக் கச்சேரியில் மகாநாடு ஒன்று நடாத்தப்பட்டபோது இப்படம் பிடிக்கப்பட்டது. திருக்கோணமலை அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னன்டோ, பனம்பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. கே. நடராசா, திருக்கோணமலை எம். பி. திரு. இ. சம்பந்தன், கலாநிதி எஸ். மோகனதாஸ் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

# பஸ்களுக்கு 'பொடி' அடித்தல்: தனியாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை: மன்னரில் பிரதிஅமைச்சர் தகவல்

(மன்னர்)

''எக்கலவில் புதிய பஸ் வண்டிகளுக்கான 'பொடி' அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இருப்பினும் இவ்வேலைகள் ஆமை வேகத்திலேயே நடைபெறுகின்றன. நாளொன்றுக்கு இரு பஸ்வண்டிகளுக்கேனும் 'பொடி' அமைக்கப்படுவதில்லை''.

இவ்வாறு மன்னருக்கு விஜயம் செய்த பிரதி போக்குவரத்து அமைச்சர் திரு. எச். பி. அபயசேகரா மன்னர் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன் தலைமையில் மன்னர் கச்சேரியில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

எக்கலவில் பஸ் வண்டிகளுக்கு 'பொடி' அமைக்கும் வேலைகளின் வேகம் போதாததால் இவ்வேலையைத் தனியாரிடம் ஒப்படைக்கலாம் என்ற எண்ணத்துடன் திறைசேரியின் அனுமதி கோரப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி விரைவில் கிடைத்துவிடுமென எதிர்பார்க்கிறேன். எக்கலவில் 300 பஸ் வண்டிகளுக்கான அடிச்சட்டங்கள் இருக்கின்றன. மேலும் 30 அடிச்சட்டங்கள் விரைவில் வந்து சேரவுள்ளன. இவ்வடிச் சட்டங்களுக்கும் ''பொடி'' அடித்தபின் ஒவ்வொரு மாவட்டத்திற்கு பஸ்கள் வழங்கப்படும்போது மன்னர் மாவட்டத்திற்கும் முதலிடம் அளிக்கப்படும்,

மன்னரில் புதிதாக நவீன முறையில் அமைக்கப்பட்டு வரும் பஸ் சாலையைப்பார்வையிட்டேன். அங்கு வேலைகள் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. ஒருபகுதியில் 12 பேரும், ஒரு பகுதியில் 10 பேரும் வேலை செய்கின்றனர்.

இங்கு வேலை செய்வதற்கு ஆட்கள் போதாது. ஆதலால் புதிய பஸ்சாலையை அமைக்கும் பொறுப்பை ஏற்றவர்கள் மேலும் ஆட்களைப் போட்டு வேலையைத் துரிதமாக முடிக்க வேண்டும். இதேபோக்கில் போனல் புதிய பஸ் சாலையின் வேலைகள் முடிய இரண்டு வருடங்களாகிவிடும். மன்னர் புதிய பஸ்சாலையை எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம் திகதி திறந்துவைக்க வேண்டும்''.

அடுத்து உரையாற்றிய மன்னர் பாரளுமன்ற உறுப்பினர் திரு. பி. எஸ். சூசைதாசன் கூறியதாவது:

## விஜயன்காலம் தொடக்கம்...

''மாறி மாறிவரும் அரசாங்கள் எதுவும் மன்னர் மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய முன்வரவில்லை. இதனல் மன்னர் மாவட்டம் தொடர்ந்தும் பின்தங்கிய மாவட்டமாகவே இருந்து வருகிவது. விஜயன் இலங்கைக்கு வந்த காலத்தில் இலங்கை எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் மன்னர் மாவட்டம் இன்றும் உள்ளது. விஜயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கை எப்படி இருந்தது என்பதை அறியவேண்டுமானல் மன்னர் மாவட்டத்தை வந்து பார்த்தால் போதும்.

மன்னர்மாவட்டத்திலுள்ள குளங்கள் யாவும் விவசாயம் செய்யமுடியாதளவுக்குத் தூர்ந்துபோயுள்ளன. அதேபோல் வீதிகளும் குண்டும், குழியுமாக படுமோசமான நிலையில் உள்ளன.

மன்னர் மாவட்டத்தில் சனத்தொகை அதிகமாக வாழும் தலைமன்னர்க்கிராமத்திற்கு 2 பஸ்வண்டிகளே சேவையிலீடுபடுத் தப் பட்டுள்ளன. இந்த பஸ்வண்டிகளே தலைமன்னர் துறைமுகப் பகுதிக்கும் சேவையிலீடுபடுத்தப்படுகின்றன.

''மன்னர் சாலையில் 30 பஸ் வண்டிகள் இருந்தபோதும் 20 பஸ் வண்டிகளே சேவையிலீடுபடுத்தப்பட்டுவருகின்றன. முன்னைய வருடங்களில் இடம்பெற்ற பல இடங்களுக்கான சேவைகள் போதிய பஸ்வண்டிகள் இல்லாததால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## அமைச்சர்களும் மறதியும்

மன்னருக்கு ஒருவர் பின் ஒருவராகப் பல அமைச்சர்கள் வருகிறர்கள். 'மன்னரை அபிவிருத்தி செய்வேன். மன்னருக்கு அது தருவேன்; இதுதருவேன்' என ஆசை வார்த்தைகள் கூறிவிட்டு மன்னர் பாலத்தைத் தாண்டியதும் சொன்ன வார்த்தைகளையெல்லாம் மறந்துவிடுகிறர்கள்.''

அடுத்து மன்னர் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை பேசினர்.

''மன்னர் ரயில் நிலையத்தில் பிரயாணிகள் தங்கிநின்று பிரயாணம் செய்ய பிரயாணிகள் தங்குமிடமில்லை. அமர்ந்திருப்பதற்கு அங்கு ஆசனங்கள் இல்லை. இதேபோல் தலைமன்னர் ரயில் நிலையத்தில் கப்பலேற வரும் பிரயாணிகள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். தலைமன்னர் துறைமுக ரயில் நிலையத்தில் தங்கிநிற்கும் பிரயாணிகளுக்கு குடிநீர், மலசலகூட வசதிகள் இல்லை. தலைமன்னர் துறைமுகத்தில் தண்ணீர் தாங்கியும் தண்ணீர்தாங்கிக்குநீர்இறைக்கும் இயந்திரமும் உண்டு. அப்படியிருந்தும் குடிநீர் வழங்கப்படுவதில்லை. குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை'' என்று அபிவிருத்தி சபைத் தலைவர் தமது பேச்சில்குறிப்பிட்டார்.

மன்னர் கச்சேரியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பிரதி போக்குவரத்து அமைச்சர் திரு. எச். பி. அபேயரட்ணவுடன் மன்னர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னர் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை, மன்னர் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர்கள் திரு. வி. கைலாசபிள்ளை, ஜனப் எஸ். கே. சாகுல் ஹமீது, மன்னர் திட்டமிடல் பணிப்பாளர் திரு எஸ். தீவகலால், மன்னர் மேலதிக அரசாங்க அதிபர்கள் ஜனப் எம். எம். மக்பூல், திரு. கோ. கோபாலரட்ணம், மன்னர் பொலிஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன் மன்னர் விலைக்கட்டுப்பாட்டதிகாரி திரு. லயனல் பெர்னண்டோ ஆகியோருடன் இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## கூட்டெரு தயாரிக்கும் போட்டி

(புலோலி)

யாழ் விவசாயத் திணைக்களத்தால் இளைஞர் விவசாயக் கழகங்களுக்கிடையே நடத்தப்படவுள்ள ''கூட்டெரு தயாரித்தல்'' போட்டியில் கலந்துகொள்ளவிரும்பும் விவசாயக் கழகங்கள் அவ்வப்பகுதி விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## ஆண்டுவிழாவும் புதிய கட்டிடத் திறப்புவிழாவு

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கத்தின் 10–வது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டிடத் திறப்புவிழாவும் இம்மாதம் 13–ந் திகதி நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவரும், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினருமான திரு. சு. நடேசு தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதிகளாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு, உடுப்பிட்டித்தொகுதி எம். பி. திரு. த. இராசலிங்கம், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா இவ்விழாவில் கௌரவிக்கப்படுவார்.

சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, கரப்பந்தாட்டப்போட்டி ஆகிய பல்வேறு போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெறவுள்ளன.

### கிளிநொச்சியில்

[பரந்தன்]

கிளிநொச்சி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் பத்தாவது ஆண்டுவிழா இம்மாதம் 17–ந் திகதி கிளிநொச்சி றொட்றிக்கோ மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகளுடன் சைக்கிள் ஓட்டப் போட்டிகள், மரதன் ஓட்டம், கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகளும் இடம்பெறும்.

## பொன்னடையும் வாழ்த்தும்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற கவியரசு முருகசூரியனின் சட்டியாப்தபூர்த்திவிழாவில்ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளும் வட பிராந்திய போக்குவரத்துச்சபை தகுதி வாய்ந்த அதிகாரி சட்டத்தரணி திரு. எஸ். கனகரத்தினம், சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா ஆகியோரும் கவியரசுக்குப் பென்னடை போர்த்திக்கௌரவித்தனர்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானசந்திரன் திருமதி ஞானச்சந்திரன் ஆகியோர் மலர் அணிவித்துகௌரவித்ததுடன் வாழ்த்துரைகளும் வழங்கினர்கள். (அ)

## இந்திய சமயப் பேச்சாளர் யாழ்- வருகிறர்

[வேலணை]

சென்னையிலிருந்து வெளிவரும் 'சுத்தசன்மார்க்கம்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. தா. பால்வண்ணர் இம்மாதம் 15 ம் திகதி இலங்கைக்கு 'விஜயம் செய்யவிருக்கிறர்.

சிறந்த சமயப் பேச்சாளரான இவர் இங்குள்ள ஆலயங்கள், தெய்வீகமன்றங்கள், பாடசாலைகள் ஆகியனவற்றிற்குச் சென்று கருத்துரைகள் வழங்கவுள்ளார். [மா]

## 4 வது கருத்தரங்கு

(சங்கானை)

இலங்கைத் தமிழினத்தின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண அனைத்து அமைப்புக்களையும் இணைந்த கருத்துப்பரிமாறல் ஒன்றை இலங்கை தேசிய ஐக்கிய மறுமலர்ச்சி இயக்கம் எதிர்வரும் சனிக்கிழமை ஏற்பாடு செய்துள்ளது.

மேற்படி இயக்கத்தினர் கடந்த மூன்று மாதங்களில் இத்தகைய மூன்று கூட்டங்களை நடத்தியிருந்தனர். இன்றைய தமிழினத்தின் நிலைமையில் அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்தாலன்று பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாதென்பதாலேயே இத்தகைய கருத்துப் பரிமாறல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைப்பாளர் திரு க. ச. கந்தசாமி தெரிவித்தார். (அ)

## இந்நூலகத்தை பிற்பகலில் திறக்கக் கோரிக்கை

(புத்தூர்)

ஏழு மாதங்களாகப்பிற்பகல் வேளைகளில் மூடப்பட்டிருக்கும் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைபுத்தூர் உபஅலுவலக பொதுசன நூலகத்தை திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று இப்பகுதி மாவட்ட அபிவிருத்தி சபையிடம் கோரியுள்ளனர்.

இந்த உபஅலுவலக நூல் நிலையத்தில் இரண்டு நூலகர்கள் கடமையாற்றி வந்தார்களென்றும் அதில் ஒருவரான திரு. கே. பரமேஸ்வரன் என்பவர் கடந்த நவம்பர் மாதம் முதல் புலோலி உப–அலுவலக பொதுசன நூல் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அந்த இடம் நிரப்பப்படாமையால் அன்று தொடக்கம் ஏழு மாதங்களாக இந்நூலகம் பிற்பகல்வேளைகளில் பூட்டப்பட்டிருப்பதாகவும், பிற்பகல் வேளைகளில் தான் மக்கள் கூடுதலாக நூலகத்தைப்பாவிப்பதனல் இந்நூலகத்தைப் பிற்பகல் வேளைகளில் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இப்பகுதி மக்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா, கோப்பாய் எம். பி. திரு. ஆலாலசுந்தரம், யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் ஆகியோரைக் கோரியுள்ளனர். (புலோலி நிரு)

## மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம்

(புலோலி)

யாழ். மாவட்ட நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம்பெற்றுள்ளார்.

இவர் இன்று பிரதமநீதியரசர் திரு. நெவில்சமக்கோன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வார். (அ)

## தேசிய இளைஞர் சேவைப் பயிற்சி

(வேலணை

தமிழ்ப்பேசும் தேசிய இளைஞர் சேவை அதிகாரிகளுக்கான வருடாந்த பயிற்சி வகுப்புக்கள் சென்றமாதம் 10ம் திகதி தொடக்கம் 19ம் திகதி வரை நிலாவெளியிலுள்ள தேசிய இளைஞர் சேவை மன்ற பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பில், இம்மன்றத்தினல் மாவட்ட ரீதியில் நடத்தப்படவுள்ள வரையறுக்கப்பட்ட ''நிஸ்கோ'' கூட்டுறவு பற்றியும் தமிழ்ப் பகுதிகளில் இளைஞர் சேவை மன்ற நடவடிக்கைகளை எவ்வாறு விரிவுபடுத்தலாம் என்பது பற்றியும், இளைஞர்சேவை கழகங்கள் அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இந்தப் பயிற்சி வகுப்பை இலங்கை தேசிய இளைஞர் சேவை மன்ற உதவி இயக்குனர் (சேவைத்திட்டப் பிரிவு) திரு. எஸ். ஆனந்தவீராவும், வடபிராந்திய உதவி இயக்குனர் திரு. என். நாகேந்திரனும் நடாத்தினர்.

## மகாகவி..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அழகாக எடுத்துரைத்த பாரதியார் எங்கள் நாட்டிலோ அல்லது இந்தியாவிலோ இன்று முக்கியமாக இருக்கும் முக்கிய இலக்கைக் கூறத் தவறிவிட்டார். அதாவது எங்கள் நாட்டுக்கு அவசியமாகத் தேவைப்படும் தன்னிறைவு பற்றி குறிப்பிடாது விட்டது பெரிய குறையாகவே இருக்கிறது.

விமலராஜாவை

# கோர்ட்டில் நிறுத்துக அல்லது விடுதலைசெய்க:

## யாழ். மாநகரசபை தீர்மானம்

(ஏ. வி மாணிக்கம்)

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவன் திரு. விமலராஜாவை நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்று யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகராட்சி மன்றத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் ஆரம்பத்தில் அமைதியாக நடைபெற்றபோதிலும் முடிவில் சில அங்கத்தவர்களின் குறுக்கீடுகளுக்கு மத்தியில் கூட்டத்தை முடித்துவைக்கவேண்டிய நிலைமை முதல்வர் திரு. இராஜா விசுவநாதனுக்கு ஏற்பட்டது.

கூட்டம் ஆரம்பமாகுமுன்னர் முதல் நிகழ்ச்சியாக டாக்டர் நடராசா, நிருபர் எஸ். செல்லத்துரை ஆகியோரின் மறைவுகுறித்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

முதல்வர் இராஜா விசுவநாதன், திரு. என். டி. செல்லத்துரை, திரு. தம்பு கந்தையா, திரு. ஆ. துரைராஜசிங்கம், டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் திரு. எஸ். தியாகராசா திரு. ஜனுப் இமாம் ஆகியோர் டாக்டர் நடராசா, நிருபர் செல்லத்துரை ஆகியோரின் சேவைகளைப்பாராட்டி இரங்கலுரை நிகழ்த்தினர்.

முதல்வர் இராஜா விசுவநாதன் அன்னார்களது குடும்பத்தினருக்கு அனுதாபச்செய்தி அனுப்பிவைக்குமாறு பணித்தார்.

பின்வரும் தீர்மானங்கள் சபையில் உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

### தமிழ்த் தாதிகள் கஷ்டம்

திரு. யோ. அ. செல்வநாயகம்:

''தமிழ்த் தாதிமார் உயர் பதவிகளைப் பெறமுடியாது காலம்பூராவும்தாதிமாராகவே இருந்து ஓய்வுபெறவேண்டிய நிலை கண்டிக்கப்படவேண்டியது. இன்று தார்மீகம் பேசும் அரசாங்கம் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமநிலையில் செயல்படுவதாக உலக அரங்கில் சொல்கின்றது. ஆனால் தமிழ்ப் பகுதியில் வேலைசெய்யும் சிங்கள மக்களுக்குத் தமிழ்அறிவு தேவையில்லையென்றும், தமிழ் மக்களுக்கு சிங்கள அறிவு தேவையென்றும் தீர்மானித்து செயல்படுகிறதுஎன்று அறியும்போது மிகவும் வேதனைப்படவேண்டியுள்ளது. தமிழ்த் தாதிமார் உயர் பதவி பெறமுடியாத வகையில் தார்மீக அரசினர் செயல்பட்டுவருகின்றார்கள். இதை உடன் நிறுத்தி தமிழ்த் தாதிமாருக்கும் தமிழ் மொழியில் உயர் பதவி பெறுவதற்கான வழிவகைகளை உருவாக்கவேண்டுமென்று இச் சபை கவலையுடன் கோருகின்றது.

### விதவைகள் பென்சன்

திரு. நா. த. செல்லத்துரை:

''யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடமை புரியும் உள்ளூராட்சி சேவையைச் சேராத சபையின் கீழ்க் கடமை புரியும் சபை ஊழியரின் விதவைகள், பிள்ளைகள் அவ்வூழியர்கள் மரணமடைய நேர்ந்துவிட்டால் ஒய்வூதியப் பணம் எதுவும் பெறமுடியாத நிலையில் இருந்து சொல்லணுக் கஷ்டங்களுக்கு அவர்கள் உள்ளாவதால் அவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தீர்க்கும்முகமாக சபை ஊழியர்களின் விதவைகளுக்கும் பிள்ளைகளுக்கும் ஒய்வூதியப் பணம் ஏனைய ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல வழங்கவேண்டும்.''

## பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்துச்செய்க -ஆ. துரைராஜசிங்கம்

திரு. ஆ. துரைராஜசிங்கம்

''மனித உரிமைகளை மீறி அப்பாவி மக்கள், சிறப்பாக நிரபராதிகளான தமிழ் இளைஞர்கள் பரங்கரவாதச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புப்படையினர் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்து துன்புறுத்தப்படுவதால் பயங்சரவாத தடைச்சட்டத்தை ஜனநாயக நடைமுறைகளில் நாட்டமுடையதாகக் கூறிக்கொள்ளும் தார்மீக அரசு உடனடியாக இரத்துச்செய்ய வேண்டும்.

''நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்படாது சுமார் 1 வருடத்திற்கு மேலாகதடுப்புக் காவலில் வைத்திருக்கப்படும் இறுதியாண்டுபட்டப்படிப்பை மேற்கொள்ளும் யாழ். பல்கலைக்கழக மாணவன் திரு. விமலராசாவை ஒன்றில் நீதி மன்றத்தின் முன் நிறுத்தவேண்டும் அல்லது விடுதலை செய்து அவர் தனது பட்டப் படிப்பை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டும்.

''பலதடவை நான் கூட்டத்துக்கு வந்துள்ளேன். ஆனால் கூட்டத்தில் பங்குபற்றமுடியாதிருக்கிறது. ஏனெனில் கூட்டத்தை அவசரமாக நடாத்தி முடித்து விடுகிறீர்கள்'' என்று முதல்வரைப் பார்த்துக்கேட்ட திரு. துரைராஜசிங்கம், சென்ற விசேஷ கூட்டத்துக்கு நான் வந்தபொழுது 3 மணிக்கு தொடங்கிய கூட்டம் 3–15க்கு முடிந்துவிட்டதாக அறிந்தேன். இதனால் நான் கலந்துகொண்டு எனது பிரச்னைகளைப் பற்றிப் பேசமுடியாமல்போய் விட்டது''என்றார்.

முதல்வர்; அன்று விசேஷ கூட்டம்தான் நடாத்தப்பட்டது. வேறு விஷயங்களில்லாதபடியால் 15 நிமிடங்களுக்குள் கூட்டத்தை முடித்து வைக்கவேண்டி ஏற்பட்டது.

யாழ்.மாநகர சபையின் தமிழ்க் காங்கிரஸ்கட்சி உறுப்பினர் திரு. மரியாப்பிள்ளை ஒப்பந்த அடிப்படையில் ராஜினாமாச் செய்ததால் அந்த இடத்துக்கு திரு,எஸ். வி. கனகலிங்கம் உறுப்பினராகப் பதவியேற்று அன்றைய கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்தார், [மா]

---

யாழ்.அபி.சபை வேலைவாய்ப்பு:

# 30,000 விண்ணப்ப படிவங்கள் முடிந்தன

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்ட 30 ஆயிரம் விண்ணப்பப்படிவங்கள் முடிவடைந்துள்ளதால் மேலும் 10ஆயிரம் படிவங்கள் அச்சிடப்படவேண்டியேற்பட்டுள்ளதாக, வேலை வங்கி பதில் செயலாளரும், மேலதிக அரசாங்க அதிபருமான திரு. எஸ். தர்மபாலன் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வேலைவாய்ப்புக்கள் கருதி விண்ணப்பம் செய்வோர் முறைப்படி அந்தப்படி அந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்காரியாலயத்தில் 2ரூபா கட்டணமாகச் செலுத்தி விண்ணப்பப் படிவம் பெற்று பூர்த்தி செய்த பின்பு, திரும்பவும் அந்தந்தக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் பதில்செயலாளர்களிடமே கொடுத்து பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்றும் எந்தவிதகாரணம் கொண்டும் மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவருக்கோ, மற்றும் அதிகாரிகளுக்கோ விண்ணப்பப்படிவங்களை வீணாகப்பதிவுசெய்து அனுப்பிவைக்கவேண்டாமென்றும் தெரிவித்த திரு. தர்மபாலன். அவ்வாறு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதிநாள் இம் மாதம் 31ந் திகதியாகும்.

இப்படிவங்கள் சிங்களத்திலும் தமிழிலும் அச்சிடப்பட்டுள்ளது. [மா]

---

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு

# இருவிசேட வைத்தியர்கள்:

## அபி.சபைத் தலைவர் வற்புறுத்து

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு இரு விசேட வைத்திய நிபுணர்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலையில் நடந்த கூட்டமொன்றில் யாழ். அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா இது குறித்து சுகாதாரப் பகுதி அதிகாரிகளிடம் வற்புறுத்தியதையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.

இவ்வைத்திய சாலைக்கு 12 வைத்தியர்கள் தேவை. ஆனால் 5 வைத்தியர்களே கடமை புரிகிறார்கள். மிகுதி 7 வைத்தியர்களுக்கான நிதியில் இரு விசேட வைத்திய நிபுணர்களை நியமிப்பதால் ஓரளவு சிறந்த வைத்திய சேவையை அளிக்கமுடியும். ஆகவே அதற்கு சுகாதாரப் பகுதியினர் ஏற்பாடு செய்ய வேண்டும் என திரு, நடராசா கேட்டுக்கொண்டார்.

இதுகுறித்த ஏற்பாடுகளை செய்து விசேட வைத்திய நிபுணர்கள் இருவரை இவ் வைத்தியசாலைக்கு நியமிக்க ஏற்பாடு செய்வதாக சுகாதாரப்பகுதி அதிகாரிகள் உறுதியளித்தனர்.

---

சந்தேகத்திற்கிடமாக நடமாடியவர்களை

# பொதுமக்கள் பிடித்து பொலிஸில் கொடுத்தனர்

(மாவிட்டபுரம்)

சந்தேகத்திடமாக வீதியில் நடமாடிய மூவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிசில் ஒட்படைக்கப்பட்டதையடுத்து றிமாண்டில் வைக்கப் பட்டுள்ளனர்.

தொண்டமானாறு- இடைக்காடு வீதியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கணேசுதவநாதன், மண்குர்பானைச் சேர்ந்த முகமட் பாருக், தலைமன்னாரைச் சேர்ந்த மைக்கல் பெர்னாண்டோ ஆகியோர் மீது பொதுமக்களுக்கு சந்தேகம் எழவே அவர்களைப் பிடித்து காங்கேசன் துறைப் பொலிசில் ஒப்படைத்தனர்.

பொலிசார் இவர்களை விசாரணை செய்தசமயம் சன்னதி கோவிலுக்கு வந்ததாகவும், வழிதவறி இங்கு வந்துவிட்டதாகவும் கூறினார்களாம் முதலாவது நபரிடம் சேலைஒன்றும் காணப்பட்டது.

இவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் போலிசார் ஆஜர் செய்தனர். இருவாரங்களுக்கு றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு. சீ.வி. விக்னேஸ்வரன் உத்தவிட்டார்.

இச் சந்தேக நபர்கள் ஏற்கனவே குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தார்களா? குற்றச் சேயலில் ஈடுபடதிட்டம் போட்டிருந்தனரா? என்பது பற்றி பொலிசார் விசாரணையில் இறங்கியுள்ளனர். ஏனைய பொலிஸ் நியங்களுடனும் தொடர்பு கொண்டுள்ளனர்.

---

## ம. கிழக்குக்கு ராஜாங்கனை பச்சைமிளகாய்

(கொழும்பு)

ராஜாங்கனையிலிருந்து பச்சைமிளகாய் நேற்று முன் தினம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. (இ)

---

# கொள்ளைப்பொருட்களில் ஒரு பகுதி மீட்பு.

## சந்தேகத்தில் இருவர் கைது.

(மாவிட்டபுரம்)

கடையை உடைத்துக் கொள்ளையிடப்பட்ட நகை, பணம் ஆகியவற்றில் ஒரு பகுதி மீட்கப்பட்டதுடன் இரு சந்தேக நபர்களும் கைதாகியுள்ளனர்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த பி. துரைசிங்கம் என்பவரது கடையை உடைத்து அங்கிருந்த 66ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் 25ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது,

இந்நிலையில் கொழும்புக்கு நகைகள் சிலவற்றை விற்கச் சென்ற அன்டர்சன் என்னும் நபரை கொட்டாஞ்சேனை பொலிசார் கைது செய்திருந்தனர்.

இவரை விசாரணை செய்த சமயம் சிவம் என்னும் பண்டத்தரிப் பைக்சேர்ந்தவர் இவற்றை தம்மிடம் தந்ததாக தெரிவித்தார். இவரையும் பொலிசார் விசாரணைக் குட்படுத்தினர்,

இவ்விருவரையும் கைப்பற்றப்பட்ட பொருட்களையும் காங்கேசன்துறைப் பொலிசார் பொறுப்பேற்று தொடர்ந்து வீசாரணையில் இறங்கியுள்ளனர்.

இவர்களிடமிருந்து 25பவுண் நகைகள், 28ஆயிரம் ரூபா பணம், 35 கைக்கடிகாரங்கள் என்பன, கைப்பற்றப்பட்டதாகவும் இவை மேற்படி கடையில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களே யெனவும் பொலிசார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேக நபர்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். காங்கேசன் துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. சேனாதிராஜா, கான்ஸ்டபிள்கள் மாணிக்கவாசகர், பௌத்தசாரா ஆகியோர் விசாரணையில் இறங்கியுள்ளனர்.

---

# இன்று ஆனைக்கோட்டையில் கலைவிழா

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை அறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தில் மூன்றுவது தடவையாக பௌர்ணமிக் கலைவிழா இன்று நடைபெற விருக்கிறது.

இக்கலைவிழாவில் தமிழ்க் காங்கிரஸ்கட்சிப் பொதுச் சேயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐப்பதிலிருந்து தமிழ் ஈழம் வரை தமிழ்மக்கள் பிரச்னையின் வளர்ச்சி' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார். மற்றும் திரு. தி. மகேந்திரசா உட்பட பலர் உரையாற்றுவர், [அ]

---

யாழ்ப்பாண மக்களின் அபிமானம் பெற்ற நிறுவனம்
மின்சார உபகரணங்கள் பாடசாலை
உபகரணங்கள், வீட்டுப்பாவனைப் பொருட்கள்
மற்றும் பரிசுப்பொருட்களுக்கு

# அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகள்,
மின்சார ஒப்பந்தகாரர்

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(போன் : 8291)

தலைமையகம் : பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் அன் சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு போன் : 24821 — 28244
லெட்சுமிபவான் 97, ஒல்ஹொட் மாவத்த, — கொழும்பு

தமிழ் இளைஞர்கள் துன்புறுத்தல்:

# பாராளுமன்றத்தில் பண்டிதர் கேள்வி

(கொழும்பு)


• பொலிசாரும், இராணுவத்தினரும் கைதுசெய்யும் தமிழ் இளைஞர்களைத் தாக்குவதையும், சித்திரவதை செய்வதையும் தடுத்து நிறுத்துவதற்கும் வழககுத் தொடராமல் பல நாட்கள் தடுப்புக் காவலில் வைத்துத் துன்புறுத்துதலையும் ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

பாராளுமன்றத்தில் பேசிய ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்

இக்கேள்வி பாதுகாப்பு அமைச்சருக்கு முன்னறிவித்தல் கொடுத்த விடயம் என்றும், அதனை இங்கே வாசிக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேலும் தெரிவித்ததாவது:- அமைச்சர் இதுபற்றி நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியுள்ளபடியால் தான் இவ்விடயம்பற்றி விபரமாக இங்கே பேசவிரும்பவில்லை.


ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
தங்கைக்காக
(புதிய பிரதி)

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஜனாப் எம்' ஜமீலுக்கு யாழ். சட்டத்தரணிகள் சங்கம் அளித்த பிரியாவிடை வைபவத்தை ஒட்டி நடைபெற்ற கிரிக்கட் ஆட்டத்தில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு சி. வி. விக்னேஸ்வரன் துடுப்பெடுத்தாடுவதையும், சட்டத்தரணி திரு சி. ரி. லிங்கராஜா (விக்சட் காப்பாளர்', ஜனாப் ஜமீல் ஆகியோர் பந்துதடுக்க ஆயத்தமாக நிற்பதையும் ஜனாப் ஜமீல் உரையாற்றுவதையும் அருகே சங்கத் தலைவர் திரு. எஸ் ஆர். கனகநாயகம் அமர்ந்திருப்பதையும் பகற்போசன விருந்தில் கலந்து கொண்ட சட்டத்தரணிகள் சிலரையும் மேலே உள்ள படங்களில் காணலாம்.

(படம்—'விசாகன்')


றீகல் (யாழ்நகர்) தினசரி 5 காட்சிகள்
KIRK DOUGLAS—RICHARD HARRIS in
The Heroes of Telemark
War Film—Color
11-6-82 முதல் ஸ்ரீதரின்: (Color)
மோகனப் புன்னகை



வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-லக்ஷ்மி-முத்துராமன்
கனிமுத்துபாப்பா (புதிய பிரதி)



வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை


## மிளகாய், மல்லி, பூடு திங்கள் முதல் விலை குறைகிறது

[கொழும்பு]

செத்தல்மிளகாய், மல்லி, பூடு, கடலை துவரம்பருப்பு, ரின்மீன் ஆகியவற்றின் விலைகளைக் குறைப்பதென்று கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

செத்தல்மிளகாய் கிலோ ஒன்று 25 ரூபாவிலிருந்து 18 ரூபாயாகக் குறைகிறது.

புதிய விலைகள் இம்வாதம் 7-ந் திகதி திங்கட்கிழமை முதல் அமுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில்

## யாழ். மாவட்டக்குளங்கள் நீர்ப்பாசன நடவடிக்கை

[புலோலி]

யாழ். கமநல சேவைத் திணைக்களத்தினல் இவ்வாண்டு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சிறிய நீர்ப்பாசன வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள ஆனைவிழுந்தான் தடுப்புச் சுவர், குமுதினி வாய்க்கால், உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள சிந்தது வெள்ள அணை, கோப்பாய்த் தொகுதியிலுள்ள நாச்சிமார் குளம், நீர்வேலி வெள்ள அணை, மானிப்பாய்த் தொகுதியில் உள்ள கரைப்பிட்டி குளம், சாவகச்சேரி தொகுதியில் உள்ள அம்மன் கோவில் புதுக்குளம், நல்லூர் தொகுதியிலுள்ள நாரியன் செளி அணை, வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள மண்டிகைக் குளம், ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள நித்தில் குளம், அந்தனேடை வாய்க்கால் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள இரட்டைப் பனைப்பீலி (புளியம் பொக்கணை), தலாவில் குளம் (பொன்னுவெளி), ஈழர்வெளி குளம் பொன்னுவெளி). ஆராத்திக்குளம் (பளை, காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள பீத்தலைவாய்க்கால் ஆகியனவற்றின் வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக திரு. பரமலிங்கம் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை சென்ற சிறுவனை காணவில்லை

புலோலி

பாடசாலை சென்ற சிறுவன் ஒருவர் வீடு திரும்பவில்லையாம். சிறுவனின் தந்தை தனது மைந்தனைத் தேடிப் பிடித்துத்தருமாறு பருத்தித்துறைப்பொலிசில் புகார் செய்துள்ளார்.

இதுபற்றி பருத்தித்துறைப் பொலிசில் காணமல்போன சிறுவனின் தந்தையான நெல்லண்டையைச் சேர்ந்த தியாகராசா குருக்கள் தமது புகாரில் 'கடந்தமாதம் 25ம்திகதி புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் வேதையா[வயது 15] என்ற எனது மகன் வழமைபோல் பாடசாலைக்குச் சென்றார். ஆனல் அவர் மீண்டும் வீடு திரும்பவில்லை. அவரைத்தேடி எங்கும் காணவில்லை. எனவே எனது மகனை தேடிப் பிடித்து தாருங்கள்'' என்று தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைப் பொலிசார் இச்சிறுவனைத் தேடிப்பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். [அ]

## நடேஸ்வரா ப. மா. சங்கம் புனரமைப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்குப் புத்துயிர் கொடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இயங்காமலிருந்த இச்சங்கத்தைப் புனரமைக்க கல்லூரியின் புதிய அதிபர் திரு. இ. க. குலசேகரன் முயற்சி மேற்கொண்டு நடைபெற்ற கூட்டத்தில் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: திரு. இ.க.குலசேகரன் (அதிபர் உபதலைவர்கள்: திரு.து.பாலசிங்கம், திரு.நா. சருணனந்தசிவம், திரு.சோ. சேனதிராஜா, திரு. இ. குருசாமி, செயலாளர்: திரு. மா. நாகேந்திரசீலன், உபசெயலாளர்: திரு. கி. சிவமூர்த்தி, பொருளாளர்: திரு.எஸ்.எம். சுப்பிரமணியம், உபபொருளாளர்: திரு. மா. இராஜேந்திரசீலன், கணக்குப்பரிசோதகர்: திரு. பொ. கணேசமூர்த்தி. உறுப்பினர்கள் 10 பேர். (அ)

## கைவேலை ஊக்குவிப்பு

(புலோலி

புலோலி தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அதன்எல்லை பகுதியில் வீட்டுத் தோட்டம், கைவேலை ஆகிய வற்றை அபிவிருத்தி செய்வதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

இப்பகுதியில் வீட்டுத்தோட்டம், கைவேலைஎன்பனவற்றை மேற்கொள்ளவுள்ள சங்க அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கவுள்ளது, வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்வதற்கு அங்கத்தவரொருவருக்கு 100 ரூபா கடனும், கைவேலையை மேற்கொள்வதற்கு அங்கத்தவரொருவருக்கு 200ரூபாகடனும் வழங்கப்படவுள்ளதாகவும் இக்கடன்களைப் பெறவிரும்பும் அங்கத்தவர்கள் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும்அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கம் சிறப்பாக இயங்கி வருவதையடுத்து இச்சங்க மேம்பாட்டிற்கு உலகவிஷன் ஸ்தாபனம் உதவிகளை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.


மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
4-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
★ கார்த்திக் ★ ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்]



ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
தொடர்ந்து ''ஹவுஸ்புல்'' காட்சிகளாக
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]



சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
3-வது வெற்றி வாரம்
கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
சுவப்ன, தேங்காய்,
தங்கவேலு, நாகேஷ்.

கடல் மீன்கள்
—கலர்—


## இன்று பெயர் சூட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பொம்மை வெளியில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு இன்று யாழ். மாநகர சபை உறுப்பினர் ஜனப் பாஷா முகைதீன் பிச்சை தலைமையில் மஸ்ஜிதுல் ஹஸ்ரத் அபூபக்கர் என்னும் பெயர் சூட்டு விழா நடைபெறும். அத்துடன் போயாதின ஒரு தப்லீக்ஜமா அத்இஜிதிமாவும் நடைபெறும். (கு)

# போயா தினத்தையொட்டி இன்று சினிமாகாட்சியில்லை

### வரணி யுவதி மரணம்:
# கொலையெனத் தீர்ப்பு
# குலத்தைக் கைதுசெய்ய பணிப்பு

(சாவகச்சேரி)

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்தகணபதிப்பிள்ளை விஜயகுமாரி (18 வயது) என்பவரின் மரணம் தொடர்பாக அதே ஊரைச்சேர்ந்த சின்னையா நாகரசா அல்லது குலம் என்பவரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படி குடத்தனைப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சு. வைரமுத்து சாவகச்சேரி பொலிஸ்பொறுப்பதிகாரிக்குப் பணித்துள்ளார்.

பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற காலஞ்சென்ற விஜயகுமாரியின் மரண விசாரணையின்போதே மரண விசாரணை அதிகாரி இவ்வுத்தரவைப் பிறப்பித்தார்.

மரண விசாரணையின்போது காலமாணவரின் தாயார் அளித்த சாட்சியம் வருமாறு:

''காலமானவர் எனது முதலாவது மகள். எனக்கு 2 ஆண் பிள்ளைகளும் 6 பெண்பிள்ளைகளும் உள்ளனர். காய்ச்சல்வலி இருந்ததால் காலமானவரை வரணி ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். வருத்தம் அதிகரிக்க நான்கு நாட்கள் கழித்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். அன்றிரவு சத்திர சிகிச்சை நடைபெற்றது. கருச்சிதைவு முயற்சிதான் இதற்குக்காரணம் என்று டாக்டர் என்னிடம் தெரிவித்தார். அதன் பின்பு நான் விஜயகுமாரியிடம் சென்று நடந்ததைக் கூறும்படி கேட்டேன்.

குலம் என்பவர்தான் இதற்குக் காரணம் என்று சொன்னார். நான் மகளை வைத்தியசாலையில் அனுமதித்த நாள் தொடக்கம் அவருடனேயே இருந்தேன். குலம் வீடு எங்கள் வீட்டிலிருந்து கூப்பிடு தொலை, அவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார், நாங்கள் இல்லாத நேரமும் வீட்டிற்கு வருவார். ஒரு நாள் வெளியே நான் சென்று வீடு திரும்பியபோது நாகராசாவும் எனது மகளும் பேசிக் கொண்டிருந்தார்கள். நாங்களில்லாத நேரம் பெண் பிள்ளைகளோடு என்ன கதை என்று கேட்டதற்குத் தான் வெளிநாடு செல்ல இருப்பதாகவும் திரும்பிவந்து விஜயகுமாரியையே மணம் முடிப்பதாகவும் கூறினர். இதிலிருந்து இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்ததாக ஊகிக்கின்றேன்.

''விஜயகுமாரி கர்ப்பமுற்றதும் அதை அழிப்பதற்கு முயற்சி நடந்திருக்கலாமென ஊகிக்கின்றேன். இதுபற்றி ஏற்கனவே விஜயகுமாரி கூறவில்லை. விஜயகுமாரியின் மரணத்திற்குக் குலம்தான் காரணமாகும்.

காலமானவரின் தந்தையையும் விசாரணை செய்த மரண விசாரணை அதிகாரி சம்பவங்களைப் பார்க்கும் போது இது ஒரு கொலை என்று தாம் தீர்ப்பளிப்பதாகவும் சந்தேகநபரானகுலம் அல்லது சின்னையா நாகராசாவைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படியும் விஜயகுமாரியின் மரணத்தின் பின்னணியைத்தொடர்ந்தும் விசா செய்யும்படியும் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குப் பணித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

செல்வத்துரை யோகநாதன் பருத்தித்துறை வைத்திய அதிகாரி ம. யோகவிநாயகம், கான்ஸ்டபிள் சந்திரசேகரம் ஆகியோரும் சாட்சியமன்த்தனர். [அ]

# சோபியா லோறன் விடுதலை

ரோம், ஜூன் 5

சிறைவைக்கப்பட்டிருந்த பிரபல ஹொலிவூட் நடிகை சோபியா லோரன் இன்று விடுதலை செய்யப்ட்டார்,

வருமானவரி தொடர்பாக பொய்த்தகவல் கொடுத்தாற்காக சோபியாலோரனுக்கு 30 நாட்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தபோதிலும் பின்னர் மன்னிப்பு வழங்கப்பட்டு 17 நாட்களிலேயே அவர் விடுதலை செய்யப்பட்டார். (இ)

## குடும்ப பகையே காரணமாம்

[யாழ்ப்பாணம்]

மிருசுவில் வடக்கில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கொலைச் சம்பவத்திற்கு குடும்பபகையே காரணம் என்றும் பயங்கரவாத சம்பவத்திற்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இத்துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 20 வயதான கு. இராசலிங்கம் பலியானார்.

## ஜோதீஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரனை நோக்கி துப்பாக்கியால் சுட்டபோது ஜோதீஸ்வரன் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகியதும் உமாமகேஸ்ரன் தப்பி ஒடியதும் தெரிந்ததே. (ம-இ(

# அரசாங்க ஊழியர்மீது இராணுவம் விசாரணை

[வவனியா]

கடமையில் ஈடுபட்டுக் கொண்டுயிருந்த அரசாங்க ஊழியர் ஒருவரை இராணுவத்தினர் விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர்.

குருநகர் முகாமிலிருந்து வந்த இராணுவத்தினரே, வவுனியா விவசாய பகுதியில் சடமையாற்றும் இந்த ஊழியரைவிசாரணைக்காகஅழைத்து சென்றுள்ளனர்.

வடபகுதியில் தடை செய்யப்பட்ட இயக்கத்துடன் இந்நபர் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரின் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டார் என சொல்லப்படுகின்றது.

அத்துடன் இந்நபர் தங்கியிருந்த அறையும் இராணுவத்தினரால் பலத்த சோதனையிடப்பட்டதாம். க)

## தமிழரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது.

தமிழ் ஈழத்தினை பெறக்கூடிய வகையில் திட்டங்களை தீட்டி தலைவர்கள் செயல்பட வேண்டும்.

### அச்சம் வேண்டாம்

தமிழகத்தில் 'தமிழ்ஈழ விடுதலைப்புலிகள்' என கூறப்படும் இலங்கை இளைஞர்கள் கைது செய்ததைப்பற்றி இலங்கை தமிழர்கள் எதுவித அச்சமும் அடையத்தேவையில்லை. தமிழக அனைத்து கட்சிகளும் இவ்விளைஞர்களுக்கு உதவகாத்திருக்கின்றன.

திருத்தணிகைக்சோ டாக்டர் ரசீத் பேசுகையில், தமிழகத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் இலங்கையின் தமிழ் ஈழ விடுதலை புலிப்படை இளைஞர்கள் விடுதலை பெற்றுவரும் போது ''தமிழ் ஈழம்'' உதயமாகிவிடும் என்றார்.

பெருங்கவிக்கோ டாக்டர் வா. மு. சேதுராமன் பேசுகையில் இலங்கையில் தமிழருக்கு தனிநாடு அமைவது கடவுள் நியதி என்றார்.

கடந்த மாதம் 3ம் திகதி இலங்கை வந்த தமிழக அறிஞர்களுக்கு வழி அனுப்பும் வைபவமாக இவ்விருந்துபசாரம் இடம்பெற்றது.

வவனியா மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. வை. சிற்றம்பலம், அதிபர் திரு. கு. பாலசுப்பிரமணியம், திரு. எம். எஸ். கந்தையா, திரு. க. நல்லதம்பி, திரு. இரா. சுப்பிரமணியம், திருமதி வி. கனகராணி ஆகியோரும் இவ் வைபவத்தில் தமிழக அறிஞர்களை பாராட்டி பேசினர்.

## குற்றம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தலைமைக்காரியாலயத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் முன்னாள் தமிழ்காங்கிரஸ் மாநகரசபை உறுப்பினர் டாக்டர் அரசபிள்ளை நடராசாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மாணவன் அப்டலிங்கம் விமலராசா ஓராண்டிற்கு மேலாக நீதிமறுக்சப்பட்ட நிலையில்– எந்தவிதமான குற்றச்சாட்டும் சுமத்தப்படாத நிலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டிப்பதோடு அவரை உடனடியாக விடுதலைசெய்யும்படியும் இவரைப்போலவே குற்றச்சாட்டுக்களின்றித் தடுப்புக்காவலில் உள்ள இளைஞர்களையும் விடுதலைசெய்யும்படியும் ஆட்சியாளர்களை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்க் காங்கிரசிற்கு மக்களுடைய ஆதரவினைத் திரட்டுவதன்மூலம் கட்சியின் லட்சியமான தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தினை வென்றெடுக்க முடியுமென்பதால் கட்சியைப் பலப்படுத்துவது என்றும் அங்கத்தவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதென்றும் கட்சிக் கிளைகளை மேலும் பல இடங்களில் அமைப்பதுடன் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [மா]


## தேவை
### கொல்லர் (BLACK SMITHS)

பொறியியல் நிறுவனமொன்றில் வெற்றிடங்கள் உள்ளன. இரும்பு வேலையில் நல்ல அனுபவம் உள்ளவர்கள் மட்டும் உடனடியாக விண்ணப்பிக்கவும். விபரங்கள் நேரில் பேசலாம். விளம்பர இல; 3364

மே/பா ஈழநாடு
யாழ்ப்பாணம். (3364]



## T. V ஏரியலில் கோளாறு?
### ஒரு வருட உத்தரவாதம்

ஒரு வருட உத்தரவாதத்துடன் மிக நுட்பமான முறையில் உடனுக்குடன் திருத்திக் கொள்ளவும்–

ஒரு வருட உத்தரவாதத்துடன் இந்தியா, ரூபவாகினி இரண்டையும் மிக மிகத் தெளிவாகப் பார்ப்பதற்கு 4 கல்வனைஸ் பைப்புகளை உபயோகித்து 50 அடி உயரத்துக்கு மேல் சுழற்சி தேவையற்ற முறையில் ஏரியலை அமைத்துக்கொள்ளவும்

செலவு 2500/- க்குள்.

நேரில்/ கடிதமூலம் தொடர்பு கொள்க

### "ஏரியல் ரஞ்சனுஸ்"
92, பழம் றேட், கந்தர்மடம்.

(யாழ் நகரிலிருந்து 80 சதம்/– பஸ் 764) (3471


# சேர். பொன். இராமநாதன் 'தமிழ் ஈழம்' கேட்காதது மாபெரும் தவறு
### டாக்டர் தர்மலிங்கம் கூறுகிறார்

(யாழ்ப்டாணம்)

''சேர். பொன்னம்பலம் இராமநாதன் காலத்திலிருந்தே எமது தலைவர்கள் தமிழ்மக்களைக் கவனிக்காமல் கைவிட்ட நிலையிலேயே இருந்து வருகிறார்கள். இன்று கூட எமது தலைவர்கள் எங்களைக் கைவிட்டுவிட்டார்கள், இவ்வாறு. தமிழீழ விடுதலை அணித்தலைவர் டாக்டர் எஸ். தர்மலிங்கம் 'சிவகுமாரன்' நினைவு தினக் கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசுகையில் சவலை தெரிவித்தார்.

நல்லூர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற இந்த நினைவுதினக்கூட்டத்தில் சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை உட்பட பெண்களும் ஆண்களும் நிறைந்திருந்தாலும் இளைஞர்களே அதிகமாகக்காணப்பட்டனர்.

டாக்டர் தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''50 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எமது தலைவர்கள் குற்றமிழைத்து வருகிறார்கள். சேர்.பொன்.இராமநாதன் அந்தக்காலத்தில் தமிழீழம் கேட்காது மாபெரும் தவறாகும். அதற்குப்பின்பு வந்த தலைவர்களும் அதே தவறைத் தான் செய்துவந்தார்கள்.

''காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையால் தமிழ் மக்களுக்கு மாபெரும் ஆபத்து காத்திருக்கிறது. அங்கே 3ம் கட்ட வேலையில் பெருந்தொகையான சிங்களத் தொழிலாளர்வேலை செய்வதால் சிங்களக் குடியேற்றமும் நடைபெறுகிறது. சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தூசியால் எமது பொருளாதாரம் பாதிப்படைவதுடன் சுகாதாரத்துக்கும் பங்கம் ஏற்பட்டு வருகிறது.


## தேவை

பிறசியர் காமன்சில் பணிபுரிவதற்கு நன்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் உடன் தேவை. பிறசியர் 'கட்டர்' ஒருவரும் உடனடியாகத் தேவைப்படுகிறார். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 'சாந்தா காமன்ஸ்' காங்கேசன்துறை வீதி மருதனமடம் சந்திக்கருகாமையில்), இணுவில். 3472


## தியாகலிங்கம் காலமானார்

[கொழும்பு]

பிரபல ராணி வழக்கறிஞர் திரு. சி. தியாகலிங்கம் தமது 82–வது வயதில் காலமானார்.

நேற்றுக்காலை மாரடைப்பால் காலமான இவர் 9 பிள்ளைகளின் தகப்பனராவார்.

இவரது இறுதிச்சடங்குகள் நாளை திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும்.


## ஊறணி புனித அந்தோனியார் திருவிழா 13-6-82

புதிய ஆலயக் கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருந்தாலும் திறந்த வெளியரங்கில் வழமைபோல வழிபாடுகள் நடைபெறுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அருள்பெற வருக! ஆலயம் எழுப்ப ஆதரவு தருக!!

- நிர்வாகிகள்

3470


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஜூ ஜூன் மீ 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.